# பத்திரிக்கைச் செய்தி

கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3 பல் மருத்துவ அலுவலர்கள், 2-பல் மருத்துவ உதவியாளர்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 5 பல் மருத்துவ அலுவலர்கள், 5-பல் மருத்துவ உதவியாளர்கள் ஆகிய பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்தஅடிப்படையில் மாதம் ஒன்றுக்கு பல் மருத்துவ அலுவலர் பதவிக்கு ரூ.34,000/- மற்றும் பல் மருத்துவ உதவியாளர் பதவிக்கு ரூ.13,800/- என்ற தொகுப்பூதியத்தில் மாவட்டநலச்சங்கம் மூலம் தேர்வுசெய்யப்பட உள்ளது. இது குறித்தவிண்ணப்பப் படிவம் மற்றும் விரிவானவிபரங்களைகோவைமாவட்ட இணையதளமுகவரிhttps://coimbatore.nic.in -லிருந்துபதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

பல் மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கு குறைந்தபட்சம் கல்வித்தகுதி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் (BDS) பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றும் Tamil Nadu Dental Council Registration செய்தும் இருக்க வேண்டும். பல் மருத்துவ உதவியாளர் பணியிடத்திற்கு குறைந்தபட்சம் கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்பணிதொடர்பாக குறைந்தபட்சம் 1 வருடம் முன் அனுபவம் இருத்தல் வேண்டும். முற்றிலும் தற்காலிகமான பல் மருத்துவ அலுவலர் பதவிக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.34,000/- வழங்கப்படும். பல் மருத்துவ உதவியாளர் பதவிக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.13,800/- வழங்கப்படும். இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் குறைந்தபட்ச வயதுவரம்பு 35 -ற்குள் (35 Years) இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட பணியிடத்திற்கு தகுதியான நபர் பூர்த்திசெய்யப்பட்ட உரிய விண்ணப்பங்களுடன் பணிக்கு தேவையான அறிவிக்கப்பட்ட அனைத்து சுய ஒப்பமிட்டசான்றிதழ்களின் நகல்களை இணைத்து **05.12.2022** அன்றுமாலை 5.00 மணிக்குள் பந்தையசாலையில் உள்ள துணை இயக்குநர் சுகாதாரபணிகள் அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அளிக்கலாம். மேற்படி பணிகளுக்கானநேர்முகத் தேர்வு _16.12,2022_தேதி காலை 10.00 மணிக்கு துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகத்தில் நடைபெறும்.

ஒப்பம்.மரு.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப
தலைவர்/மாவட்ட ஆட்சித்தலைவர்
மாவட்ட நலவாழ்வு சங்கம்,
கோயம்புத்தூர்.

//உண்மை நகல் உத்தரவின்படி அனுபப்படுகிறது//

P. Uma
18/11/22

உறுப்பினர்/செயலாளர்
துணைஇயக்குநர் சுகாதாரப்பணிகள்
மாவட்ட நலவாழ்வு சங்கம்,
கோயம்புத்தூர்.

18.11.22

## பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புமருந்துதுறை
## மாவட்டநல்வாழ்வுசங்கம்(District Health Society ),கோயம்புத்தூர் மாவட்டம்

பொருள்: NHM-பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, கோயமுத்தூர் மாவட்டம் - அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பல் மருத்துவர் மற்றும் பல் மருத்துவ உதவியாளர் பதவியில் பணிபுரிவதற்கு ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட நல்வாழ்வு சங்கத்தின் மூலம் பணிநியமனம் செய்தல்- இதுகுறித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை:

1.G.o.(Ms)No.513, H&FW(EAPII)Dept, Dt-03.12.2020
2.G.O.(Ms)No.515, H&FW(EAPII) Dept, Dt-03.12.2020
3.W.P (MD)No.19565 of 2020 and W.M.P.(MD)Nos.16296 & 16797 of 2020 Beofre Madurai Bench of Madras High Court Order Dt-22.01.2021.
4.W.M.P.(MD)Nos.1935 of 2021 and W.M.P(MD)Nos.1650&1651 of 2021, dt-04.02.2021.
5.Proc.No.7852/P9/SHS/2013, dt-03.07.2017 and R.No.7852/NHM/P14/2020 Dt:12.07.2021
7.Proc.No.2249/P12/SHS/2016 Dt:14.10.2019 and Ref.No.2249/SHS/P9/2016 Dt:10.03.2018.
9.Proc.No.6298/2017/SHS/A4, dt-25.10.2021.(Dental surgeon Pay revised)
10.R.No.9035/E/NHM/2021, dt-26.07.2022. (Dental asst pay revised)

தேசியசுகாதாரதிட்டத்தின் கீழ் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, கோயமுத்தூர் மாவட்டம் - அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பல் மருத்துவர் மற்றும் பல் மருத்துவ உதவியாளர் பதவியில் பணிபுரிவதற்கு ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட நல்வாழ்வு சங்கத்தின் மூலம் பணிநியமனம் செய்வதற்கு ஒப்பளிக்கப்பட்ட கீழ்கண்டமுற்றிலும் தற்காலிகமான பதவிகளுக்கு ஒப்பந்தஅடிப்படையில் பணிபுரிவதற்கு தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் **05.12.2022** அன்று மாலை 5.00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| S. No | Name of the Post | No. Of Post | Educational Qualification & Required Experience | | Monthly Salary (On Contract Basis | Age |
|---|---|---|---|---|---|---|
| 1 | Dental Surgeon | 8 | 1.அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டபடிப்புதேர்ச்சி (BDS) பெற்றிருக்க வேண்டும்<br>2.Tamil Nadu Dental Council Registration செய்திருக்க வேண்டும். | Minimum 1 year Experience | Rs.34,000/- | 35 years |
| 2 | Dental Assistant | 7 | பத்தாம்வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் | Minimum 1 year Experience | Rs.13,800/- | 35 years |

**நிபந்தனைகள்:-**

1. இந்தப் பதவிகள் முற்றிலும் தற்காலிகமானது.
2. எந்த ஒரு காலத்திலும் பணிநிரந்தரம் செய்யப்படமாட்டாது.
3. பணியில் சேருவதற்கான சுய விருப்பஒப்புதல் கடிதம் (Under Taking) அளிக்கவேண்டும்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டியமுகவரி:-**

உறுப்பினர் செயலாளர்/ துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்,
மாவட்டநல்வாழ்வுசங்கம் (District Health Society)
துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம், 219, ரேஸ் கோர்ஸ் ரோடு,கோயமுத்தூர்-18.

குறிப்பு:-

1. விண்ணப்பங்கள் நேரிலோ/விரைவுதபால் (Speed Post) மூலமாகவோவரவேற்கப்படுகின்றன.
2. விண்ணப்பபடிவங்கள் அருகிலுள்ளமாவட்டதுணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகத்தில் மற்றும் வட்டார சுகாதாரநிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். https://coimbatore.nic.inஎன்ற இணையதளமுகவரியில் பதிவிறக்கம் செய்யலாம்.
3. மேற்குறிப்பிட்ட பதவிகளின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.

ஒப்பம்.மரு.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப
தலைவர்/மாவட்ட ஆட்சித்தலைவர்
மாவட்ட நலவாழ்வு சங்கம்,
கோயம்புத்தூர்.

//உண்மை நகல் உத்தரவின்படி அனுபப்படுகிறது//

18/11/22

உறுப்பினர்/செயலாளர்
துணைஇயக்குநர் சுகாதாரப்பணிகள்
மாவட்ட நலவாழ்வு சங்கம்,கோயம்புத்தூர்.

18.11.22